# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. NO. 37/2019
## PW 1

| | | |
|---|---|---|
| Name | : | ஜாப்ரூகான் |
| Father's/Husband's Name | : | இஸ்மாயில்கான் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.02.2025.

**A1, 2, 4 to 17 present.**

**முதல் விசாரணை -**

(சாட்சிக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் தெரியாத காரணத்தினால் சாட்சி பட்டியில் 2 வது சாட்சியாக இருக்கும் கருணாநிதி என்பவர் இந்தியில் மொழி பெயர்ப்பு செய்து சாட்சியம் பதிவு செய்யப்பட்டது)

(1) நான் இராஜஸ்தான் மாநிலம், பரத்பூர் மாவட்டம், நகர் தாலுக்கா, சிக்கிரிப்பட்டி கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் லாரி கிளீனிராக வேலைசெய்து வந்து தற்போது வீட்டருகே கடை வைத்துள்ளேன் . இந்த வழக்கில் இறந்துபோன சக்கர்கானை எனக்கு தெரியும். அவர் சம்பவ காலத்தில் HR 55N 6976 என்ற பதிவெண் கொண்ட கண்டெயிலரில் லாரி ஒட்டுநராக பணி செய்து வந்தார். இறந்து போன சக்கர்கான் என் வீட்டில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் குடியிருந்து வந்ததால் சம்பவத்துக்கு முன்னரே அவரை எனக்கு தெரியும் . நான் அந்த கண்டெயினர் லாரியில் கண்டக்ட்ராக வேலை செய்தேன்.

(2) கடந்த 23.04.2013 ம் தேதியன்று மேற்படி பதிவெண் கொண்ட HR 55N 6976 கன்டெயினர் லாரியை அரியானா மாநிலம் , தார்வேடாவிலிருந்து புறப்பட்டு திருவண்ணாமலை வழியாக சென்றோம். 26 ம் தேதியன்று இரவு 1.00 மணிக்கு திருவண்ணாமலை நகருக்கு முன் இருபக்கமும் தண்ணீர் தெரிந்த ஒரு இடத்தில் ஒரு 4, 5 நபர்கள் லாரியை மறித்தார்கள். பின்னர் நான் லாரி ஓட்டுனரை கீழே இறங்க சொன்னார்கள். ஆனால் அவர் இறங்கவில்லை. அதனால் அவர்கள் ஓட்டுனருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள். பின்னர் ஒரு நபர் கல் எடுத்து லாரியின்கன்டக்ர் பக்கம் முன்இடதுபக்க கண்ணாடியை உடைத்தார். மற்றொருவர் பெட்ரோல் இருந்த பாட்டிலால் டிரைவர் இருக்கைக்கு முன் இருந்த கண்ணாடி மீது எறிந்தார் .. அதனால் வண்டி தீப்பிடித்தது.

(3) எனக்கு மூக்கு, இடது காது, கால் ஆகிய இடங்களில் அடிப்பட்டது. நான் லாரியில் இருந்து வெளியே குதித்தேன். டிரைவர் சக்கர்கானுக்கு தீ பிடித்ததால் அவர் லாரியில் இருந்து கீழே இறங்கினார். அவருக்கு முகம் மற்றும் உடலில் தீக்காயம் ஏற்பட்டது. அந்த வழியாக வந்த ஒரு டாட்டா சுமோவில் இருந்த 2 நபர்கள் இறங்கி சக்கர்கானை பார்த்துவிட்டு போய் போலீசாருக்கு தகவல் கொடுத்துள்ளார்கள் . பின்னர் போலீசார் அங்கு வந்தார்கள் . இருவரையும் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள் . அங்கு சிகிச்சை அளித்தபின்னர் சக்கர்கானை மேல் சிகிச்சைக்காக வேலூர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு 4 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டு பின்னர் சிகிச்சை பலன் இன்றி சக்கர்கான் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக நான் திருவண்ணாமலை கிராமிய காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஒரு இந்தி தெரிந்த ஒருவரிடம் நான் சொல்ல சொல்ல அவர் தமிழில் புகாரை எழுதி கொடுத்தார் . அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த புகார். அந்த புகார் அ.த.சா.ஆ.1.

(4) லாரி மீது கல் மற்றும் பெட்ரோல் பாட்டில் வீசியவர்களை அடையாளம் காட்ட முடியுமா என்றால் 12 வருடம் ஆனதால் தற்போது அடையாளம் காட்ட முடியவில்லை. இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சிறைச்சாலைக்கு அழைத்து சென்று அடையாளம் காணும் அணிவகுப்பு நடத்தினார். அதில் குற்ற செயலில்

ஈடுபட்ட 4 நபர்களை நான் அடையாளம் காண்பித்தேன் . என்னிடம் காட்டப்படும் அடையாள அணி வகுப்பு குறிப்பில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான் . அந்த லாரிக்கு 12,18 லட்சம் அளவில் சேதம் ஏற்பட்டது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

லாரிக்கு தீ பிடித்த 15 நிமிடத்தில் போலீசார் அந்த இடத்திற்கு வந்துவிட்டார்களா என்றால் இல்லை . அதன்பின்னர் எவ்வளவு நேரத்தில் வந்தார்கள் என்றால் அரை மணி நேரத்தில் வந்தார்கள் . அங்கு வந்த போலீசாரிடம் நடந்ததை சொன்னேன் . அந்த இடத்தில் போலீசார் நான் சொன்னதை எழுதி கொண்டார்களா என்றால் இல்லை . (தற்போது சாட்சி ஞாபகமில்லை என்று கூறுகிறார்) நான் கொடுத்த புகாரை மொழி பெயர்ப்பு செய்தவரை போலீசார் அழைத்து வந்தார்களா என்றால் ஆமாம். அந்த மொழி பெயர்ப்பாளரை என்னால் அடையாளம் காட்ட முடியாது. லாரி அங்கு நின்ற சமயத்தில் பல கனரக வாகனங்கள் அந்த வழியாக சென்று வந்தது என்றால் இல்லை.

மொழி பெயர்ப்பாளர் சாட்சி கையொப்பம்

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-G. Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. NO. 37/2019**
**PW 2**

| | | |
|---|---|---|
| Name | : | கருணாநிதி |
| Father's/Husband's Name | : | பூங்காவனம் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.02.2025.

**A1, 2, 4 to 17 present.**

**முதல் விசாரணை -**

(1) நான் இந்திய ராணுவத்தில் பணி செய்து ஓய்வு பெற்று திருவண்ணாமலையில் வசித்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு சம்பவத்தன்று தெரியும். கடந்த 02.05.2013 ம் தேதியன்று காலை சுமார் 6.30 மணிக்கு கிராமிய காவல் நிலையத்தில் இருந்து போலீசார் என்னை அழைத்தார்கள் . நான் காவல் நிலையத்தில் அ .சா.1 யை பார்த்தேன். அ.சா.1 நடந்ததை இந்தியில் சொன்னார் . நான் அதை மொழி பெயர்த்தேன். இந்தியில் இருந்து தமிழ் மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்து புகார் மனுவை எழுதினேன். புகார் மனுவில் நான் மொழி பெயர்ப்பு செய்ததற்காக அதில் கையொப்பம் இட்டுள்ளேன். என்னை போலீசார் விசாரித்தபோது நான் நடந்ததை சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

(1) புகாரில் உள்ள அம்சங்களை நான் தான் எழுதினேன். எனக்கு தமிழ் சரியாக எழுத வராது என்றால் சரியல்ல. இப்போது எழுத சொன்னாலும் நான் எழுதுவேன். ஆனால் எழுத்து பிழை மட்டும் ஏற்பட வாய்ப்புள்ளது . (சாட்சி தமிழில் எழுத சொன்னபோது அவர் தன்னிடம் கண்ணாடி இல்லையென்றும் அதனால் எழுதமுடியாது என்றும் கூறினார்) நான் இந்தி படித்துள்ளேன் என்பதற்கும் அதை மொழி பெயர்க்க தகுதியுடைவன் என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான் . நான் மொழி பெயர்ப்பு செய்ய தகுதி பெற்றதாக எந்த அரசாங்கமும் எனக்கு சான்றிதழ் வழங்கவில்லை .. புகார்தாரர் சொல்ல சொல்ல நான் தொடர்ச்சியாக தமிழில் எழுதி வந்தேனா என்றால் ஆமாம்.

(2) இந்த புகாரில் "பெறுனர், உதவி ஆய்வாளர், கிராமிய காவல் நிலையம் " என்பதை புகார்தாரர் சொல்லவில்லை. நான் அன்றையதினம் சுமார் 2 மணி நேரம் காவல் நிலையத்தில் இருந்தேன். அப்போது காவல் நிலையத்தில் எதிரிகள் ஏழுமலை த /பெ. வேலு, பட்டுசாமி, பார்த்தீபன், முருகன் ஆகியோர்கள் காவல் நிலையத்தில் இருந்தார்களா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது . நான் புகாரை எழுதவில்லை என்றும் , போலீசார் கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . புகாரில் புகார்தாரர் சொன்ன விவரங்களை எழுதாமல் போலீசார் சொன்ன விவரங்களை எழுதிவிட்டேன் என்றால் சரியென்று சொல்லிவிட்டு மீண்டும் சரியல்ல என்று சொல்கிறார்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-G. Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.